


திருமதி. சே.மாசிலாமணி
உதவிப்பேராசிரியை
ஏல  விவசாயிகள் சங்கக் கல்லூரி
போடிநாயக்கனூர்




**தொல்காப்பியம்**என்பது, தமிழ் இலக்கண நூல்களில் மிகவும் பழமையான தமிழ் இலக்கண நூலாகும்.

இதை எழுதியவர் *தொல்காப்பியர் ஆவார்.*

இது இலக்கிய வடிவிலிருக்கும், இலக்கண நூல் ஆகும்.

எழுத்து சொல் பொருள் எனும் மூன்று பிரிவுகளை உடையது

## நூலின் அமைப்பு

இந்நூல் சூத்திர யாப்பில் அமைந்துள்ளது. இதில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பெரும் பிரிவுகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் ஒன்பது இயல்கள் அமைந்துள்ளன.

| எழுத்ததிகாரம் | சொல்லதிகாரம் | பொருளதிகாரம் |
|---|---|---|
| 1) நூன் மரபு | 1) கிளவியாக்கம் | 1) அகத்திணை இயல் |
| 2) மொழி மரபு | 2) வேற்றுமையியல் | 2) புறத்திணை இயல் |
| 3) பிறப்பியல் | 3) வேற்றுமைமயங்கியல் | 3) களவியல் |
| 4) புணரியல் | 4) விளிமரபு | 4) கற்பியல் |
| 5) தொகைமரபு | 5) பெயரியல் | 5) பொருளியல் |
| 6) உருபியல் | 6) வினையியல் | 6) மெய்ப்பாட்டியல் |
| 7) உயிர் மயங்கியல் | 7) இடையியல் | 7) உவமைஇயல் |
| 8) புள்ளிமயங்கியல் | 8) உரியியல் | 8) செய்யுளியல் |
| 9) குற்றியலுகரப் புணரியல் | 9) எச்சவியல் | 9) மரபியல் |

## எழுத்ததிகாரச் செய்திகள்

தமிழ் எழுத்துகளாகிய உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டுமாகிய முப்பதும், குறில் நெடில் என்றும், வல்லினம், மெல்லினம், இடையினம் என்றும் பாகுபடுத்தப்படும் செய்திகள் இடம்பெறுகின்றன. இவற்றுள் சொல்லின் முதலிலும் இறுதியிலும் வருபவை இன்னவை என்பதும் விளக்கப்பட்டுள்ளன

தமிழ் ஒலிகள் பிறக்கும் பொது இயல்பும், தனித்தனி எழுத்துகளின் பிறப்பு முறையும் இன்றைய ஒலியியலாரும் வியக்கும் வண்ணம் விளக்கியுள்ளார் ஆசிரியர்; ஒலிவடிவத்தை மட்டுமல்லாது, வரிவடித்தையும் குறித்துள்ளார்; எகரமும், ஒகரமும், குற்றியலுகரமும் புள்ளி பெறும் என்கின்றார்.

இவ்வதிகாரத்தின் பெரும்பகுதி, சொற்கள் நிலைமொழியாகவும் வருமொழியாகவும் நின்று புணரும் நிலைகளையே விளக்கிச் செல்கிறது. புணர்ச்சியை வேற்றுமைப் புணர்ச்சி என்றும், வேற்றுமை அல்லாத புணர்ச்சி என்றும், இயல்புப் புணர்ச்சியென்றும், விகாரப்புணர்ச்சி என்றும் இவர் பாகுபாடு செய்து விளக்குகின்றார்.

# சொல்லதிகாரச் செய்திகள்

தமிழ் இலக்கணத்தில் சிறப்பாக அமைந்த கூறுகளுள் திணைப்பாகுபாடும் ஒன்று. உயர்திணை அஃறிணை என்ற அடிப்படையிலே பெயர்கள் தோன்றுவதனை விளக்கி, இருதிணைக்கும் உரிய ஐந்து பால்களையும், அவற்றுக்கு உரிய பெயர், வினை ஆகியவற்றின் ஈறுகளையும் விளக்குகின்றார்.

தமிழ்த் தொடர்களின் இலக்கணம் இவ்வதிகாரத்தில் சிறப்பாக விளக்கப்படுகிறது. தொடர்களின் ஆக்கம், தொடரில் சொற்கள் நிற்கும் நிலை முதலியன விளக்கம் பெறுகின்றன.

வேற்றுமை உருபுகள், அவை ஏற்கும் பொருள்கள், ஒரு வேற்றுமைப் பொருளை இன்னொரு வேற்றுமையின் உருபு கொண்டு விளங்கும் வேற்றுமை மயக்கம், இருதிணைப் பெயர்களும் விளியேற்கும் மரபு, விளியை ஏற்காத பெயர்கள் முதலானவை தெளிவுறுத்தப்படுகின்றன

# பொருள் இலக்கணம்

பொருள் இலக்கணம் அகம், புறம் என்ற இரு பிரிவுகளுள் அடங்கும். இது தமிழரின் கவிதை இயலாகும்.ஏழு அகத்திணைகளும், அவற்றின் கூறுகளும் அகத்திணை இயலுள் சொல்லப்படுகின்றன. அகத்திணை இலக்கியத்திற்கு ஏற்ற யாப்பாக, பரிபாடலும் கலியும் ஆசிரியரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

அகத்திணை ஒவ்வொன்றுக்கும் புறமாக, ஒவ்வொரு புறத்திணை வகுத்துரைக்கப்பட்டுள்ளது. அகத்திணை ஏழு என்றும், புறத்திணை பன்னிரண்டு என்றும் கூறப்பட்டுள்ளன. புறத்திணை இயல் தமிழரின் போர் முறையை விவரிக்கிறது. இறந்துபட்ட மறவர்களுக்குக் கல்நட்டு வழிபாடு செய்யும் மரபினைத் தொல்காப்பிய ஆசிரியர் வெட்சித்திணையில் கூறியுள்ளார்.

அகத்திணை களவு, கற்பு என்ற இரு நிலைகளில் இயற்றப்படுகிறது. இவ்விரு ஒழுக்கங்களிலும் இடம் பெறும் மாந்தர், அவர்கள் பேசும் சூழல்கள் முதலியனவே களவியலிலும் கற்பியலிலும் விவரிக்கப்பட்டுள்ளன.